மு.லோகநாதன் தலைமை! நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

வேதாரண்யம் ஒன்றியம், கீழையூர் ஒன்றியம், நாகப்பட்டினம் நகராட்சியை மறுசீரமைப்பு செய்வது என தீர்மானம்!

என். கௌதமன் – பி.எஸ்.சீனிவாசன் – இளமகிழன் பங்கேற்பு!

நாகை, அக். 26–

நாகை மாவட்ட கழக செயற்குழு கூட்டம் நாகையில் மாவட்ட கழக அலுவலகமான தளபதி அறிவால யத்தில் கலைஞர் அரங்கில் நடை பெற்றது.

கூட்டத்திற்கு மாவட்ட கழக பொருளாளர் மு.லோகநாதன் தலைமை தாங்கினார். முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், மாநில விவசாய அணி துணைத்தலைவர் எஸ் கே.வேதாரத்தினம், தலைமை செயற் குழு உறுப்பினர்கள் .க.இரா ஜேந்திரன், ப.கோவிந்தராஜன், இல.மேகநாதன், , மாவட்ட துணை செயலாளர் கற்பகம் நீலமேகம் ஆகியோர் முன்னிலை வைத்தனர். மாவட்ட துணைச் செயலாளர் ஆரூர்மணிவண்ணன் வரவேற் றார்.

கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறை வேற் றப்பட உள்ள தீர்மானங்கள் குறித் தும், நாகை மாவட்ட கழக செயலா ளர் என்.கௌதமன் பேசினார். அதைத் தொடர்ந்து தலைமையில் தலைமைக் கழக பிரதிநிதிகளான மாநில இளைஞர் அணி துணைச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பி னர் பி.எஸ்.சீனிவாசன் மதுரை தெற்கு மாவட்ட தலைமைச் செயற் குழு உறுப்பினர் இளமகிழன் ஆகி யோர் சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில் மாநில மீனவர் அணி துணை செயலாளர் ஜி.மனோகரன், தலைமைக் கழக வழக்கறிஞர் மு. தினேஷ்குமார், மாநில மாற்றுத்திற னாளிகள் அணி துணைச் செயலா ளர் அம்பல் குமார், மாநில சிறு பான்மை அணி துணை செயலாளர் மு.சாகுல்ஹமீது,

ஒன்றிய கழக செயலாளர் ஆ.தாமஸ் ஆல்வா எடிசன், மகா. குமார், ஆர். டி.எஸ்.சரவணன், செல்வ,செங்குட்டுவன், கே.பழனி யப்பன், சோ.பா. மலர்வண்ணன், என்.சதாசிவம், சிக்கல் என். ஆனந்த், உதயம் வே.முருகையன், நகர கழக செயலாளர்கள் இரா.மாரி முத்து, எம்.ஆர்.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ். பி..டி.சார்லஸ், கோ.சிவகுமார், உமா செந்தாமரைச்செல்வன், பேரூர் கழக செயலாளர்கள் கா.அட் சலிங்கம், மரியசார்லஸ், சி.சுப்பிர மணி யன். மாவட்ட சார்பு அணிக லின் அமைப்பாளர்கள் பி.என். கார்த்தி, ப.உதயகுமார், அ.பாரிபா லன், ஆர்.ஏ.டி. அண்ணாதுரை. ஆர்.துரைராஜ், கேஸ் வீ.செந்தில், பெ.முருகானந்தம். எஸ்.பால்ராஜ், க.சத்தியமூர்த்தி, த. தமயந்தி, வ. காமல், ஆர், ஆர். குலோத்துங்கள், பாலமுரளி, ஆர்.சுரேந்தர், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பா ளர்கள் எஸ். டேனி யல்சத்யா, தி. கலையரசன், தாமோதரன், ஆகி யோர் கலந்து கொண்டனர். கூட்டத் தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் கழகத் தலைவர் தள பதியார் ஆணைக்கினங்க, கழக மறுசீரணப்பு தொடர்பாக, வேதா ரண்யம் மேற்கு, வேதாரண்யம் கிழக்கு ஆகிய இரண்டு ஒன்றியங் களை வாக்காளர்கள் அதிமாக உள் ளதால் நான்கு ஒன்றியங்களாக அதாவது வேதாரண்யம் மேற்கு,, வேதாரண்யம் கிழக்கு, வேதாரண் யம் வடக்கு, வேதாரண்யம் தெற்கு ஒன்றியங்கள் என்று மறுசீரமைப்பு செய்வது என்றும், ஒருகிணைந்த கீழையூர் ஒன்றியம் அதிக, வாக்கா ளர்களாக கொண்ட ஒன்றியமாக இருப்பதால் ஒருங்கிணைந்த கீழை யூர் ஒன்றியத்தில் உள்ள வாக்கா ளர்களை கணக்கில் கொண்டு. கீழையூர் கிழக்கு ஒன்றியம், கீழை யூர் மேற்கு ஒன்றியம் என சமமாக பிரித்து இரண்டு ஒன்றியங்களாக மறு சீரமைப்பு செய்வது என்றும், நாகப்பட்டினம் நகராட்சி அதிக வாக் காளர்களை கொண்ட நகராட்சி யாக.இருப்பதால் ஏற்கனவே நாகப் பட்டினம் நகரம், நாகூர் நகரம் என இரண்டாக உள்ள நிலையில், இந்த இரண்டு நகரங்களை சமமாக பிரித்து நாகை நகரம், நாகூர் நகரம் உருவாகிடுவது என்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது

கோவை மாணவன் அகிலனின் மரணத்திற்கு நீதி வேண்டும்!

குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்!

ஆதித்தமிழர் பேரவை நிறுவனத் தலைவர் இரா.அதியமான் அறிக்கை!



சென்னை, அக்.26-

கோவையில் 15 வயது அருந்ததியர் மாணவன் அகி லன் மரணம்! பள்ளியில் சாதியப் பாகுபாடு மற்றும் மி ர ட் ட ல் குறித்த குற்றச்சாட்டுகள் குறித்து உரிய விசாரணை நடத்தி நீதி வழங்க வேண்டும்! என் றும் கே.கே. நாயுடு பள்ளி நிர்வாகம் மற்றும் சம்பந்தப் பட்ட ஆசிரியர் மீது சட்டப் படி கடுமையான நடவ டிக்கை எடுக்க வேண்டும்! என்றும் ஆதித் தமிழர் பேர வையின் நிறுவனர் தலைவர் இரா.அதியமான் வெளியிட் டுள்ள அறிக்கையில் குறிப் பிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வரு மாறு:-

கோவை மாவட்டம், பீள மேடு அருந்ததியர் காலனி யைச் சேர்ந்த அசோக்குமார் - கௌசல்யா தம்பதியரின் 15 வயது மகன் அகிலன், ஹோப் காலேஜ் பகுதியில் உள்ள கே.கே. நாயுடு பள்ளி யில் பதினொன்றாம் வகுப்பு படித்து வந்த நிலையில், தூக் கிட்டுத் தற்கொலை செய்து கொண்ட செய்தி மிகுந்த அதிர்ச்சியையும் வேதனை யையும் ஏற்படுத்தியுள்ளது.

மாணவன் அகிலன் மர ணம் தொடர்பாக பீளமேடு E2 காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதா கத் தெரிவிக்கும் ஆவணங் கள் வெளியாகியுள்ளன. அதில், மாணவனின் மரணம் தொடர்பான புகாருடன் பட்டியலின மக்களுக்கு எதி ரான சாதியப் பாகுபாடு மற் றும் வன்கொடுமைத் தடுப் புச் சட்டம் தொடர்பான குற்றச்சாட்டுகளும் இடம் பெற்றுள்ளன. மேலும், இந் திய தண்டனைச் சட்டத் திற்கு மாற்றாக நடை முறையில் உள்ள பாரதிய நியாய சன்ஹிதா (BNS) சட் டப்பிரிவுகளின் கீழும் வழக் குப் பதிவு செய்யப்பட்டுள் ளதாக ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் உண்மை கள் முழுமையாக வெளிவரு வதும், மாணவனின் மரணத் திற்கான காரணங்கள் கண்டறியப்படுவதும், பாதிக்கப்பட்ட குடும்பத் திற்கு நீதி கிடைப்பதும் மிக முக்கியமானதாகும்.

தங்களது பிள்ளைகள் கல்வி கற்று உயர வேண்டும் என்ற கனவோடு உழைக்கும் ஏழை, எளிய பெற்றோர்க ளின் நம்பிக்கையாக விளங்க வேண்டிய கல்விக்கூடங் களே சாதியப் பாகுபாட் டின் களமாக மாறிவிடக் கூடாது.

மாணவன் அகிலன் பள் ளிக் கல்வியாண்டின் தொட க்கத்திலிருந்தே பள்ளிக்குச் செல்ல விருப்பமில்லை என்று கூறிவந்த நிலையில், அதற்கான காரணத்தைப் பெற்றோர் விசாரித்தபோது, பள்ளியில் தனக்கு நேர்ந்த தாகக் கூறப்படும் சாதியப் பாகுபாடு குறித்த தகவல்கள் தெரியவந்துள்ளன.

கடந்த இரண்டு மாதங்க ளுக்கு முன்பு, கல்வி உத வித்தொகை தொடர்பாக வகுப்பில் மாணவர்கள் முன் னிலையில் விசாரித்தபோது, வகுப்பு ஆசிரியர் விஜய குமார் என்பவர் மாணவன் அகிலனிடம், "நீ மாட்டுக் கறி சாப்பிடுபவனா?" என்று கேட்டதாகவும், அதற்கு மாணவன் தனது தந்தை வீட்டிற்கு வரும்போது மாட்டுக்கறி வாங்கி வரு வார் என்று பதிலளித்ததாக வும் குடும்பத்தினர் தெரிவித் துள்ளனர்.

இதையடுத்து, தனது மக னுக்கு நேர்ந்த அவமானம் குறித்து விளக்கம் கேட்கத் தந்தை பள்ளிக்குச் சென்றுள் ளார். அதன் பின்னர் மாண வன் அகிலனைத் தனியாக அழைத்து ஆசிரியர் மிரட்டி யதாகவும் குடும்பத்தினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்தச் சம்பவங்களால் மன உளைச்சலுக்கு ஆளான தாகக் கூறப்படும் மாண வன், இறுதியில் தற்கொலை செய்து கொண்டிருப்பது நெஞ்சைப் பிளக்கும் துயர மாகும்.

மாட்டுக்கறி உண்பது ஒரு உணவுப் பழக்கம். அதை வைத்து ஒரு மாண வனை அவமானப்படுத்துவ தற்கோ, அச்சுறுத்து வதற்கோ, சாதிய அடிப்படை யில் இழிவுப டுத்துவதற்கோ எவருக்கும் உரிமை கிடையாது.

இந்திய அரசமைப்புச் சட் டம் ஒவ்வொரு குடிமக னுக்கும் சமத்துவத்தையும் கண் ணியத்தையும் உறுதிசெய்கி றது. ஆனால், பள்ளிப் பரு வத்திலேயே சாதிய அடை யாளத்தையும் உணவுப் பழக்கத்தையும் முன்வைத்து ஒரு மாணவன் அவமானப்ப டுத்தப்பட்டதாகக் குற்றச் சாட்டு எழுந்திருப்பது நமது கல்வி அமைப்பின் மீதான மிகப்பெரிய கேள்வியாகும்.

ஒரு மாணவனின் உயிரி ழப்பை வெறும் தற்கொலை என்ற ஒற்றைச் சொல்லுக் குள் அடக்கிவிட முடியாது. அவருக்கு நேர்ந்ததாகக் கூறப்படும் அவமானம், மிரட்டல் உள்ளிட்ட அனைத்துக் குற்றச்சாட்டு களும் விசாரிக்கப்பட வேண் டும். மாணவனின் மரணத் திற்கும் பள்ளியில் நிகழ்ந்த தாகக் கூறப்படும் சம்பவங்க ளுக்கும் இடையிலான தொடர்பு உள்ளிட்ட அனைத்து உண்மைகளும் நேர்மையான விசாரணை யின் மூலம் வெளிக்கொண ரப்பட வேண்டும்.

1. நேர்மையான விசாரணை:

மாணவன் அகிலனின் மர ணம் தொடர்பாகப் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அடிப்படை யில், சாதியப் பாகுபாடு, அவமதிப்பு மற்றும் மிரட் டல் குறித்த குற்றச்சாட்டுகள் உள்ளிட்ட அனைத்து அம் சங்களையும் விசாரித்து, உண்மைகளை வெளிக்கொ ணர வேண்டும்.

2. குற்றஞ்சாட்டப்பட்ட வர்கள் மீது நடவடிக்கை:

பள்ளியின் தாளாளர், சம் பந்தப்பட்ட வகுப்பு ஆசிரி யர் உள்ளிட்ட குற்றச் சாட் டுக்கு உள்ளான அனைவரி டமும் முறையாக விசா ரணை நடத்தி, ஆதாரங்க ளின் அடிப்படையில் பொருந்தும் சட்டப்பிரிவுக ளின் கீழ் உடனடியாகக் கடு மையான நடவடிக்கை எடுக்க வேண்டும். கைது செய்வதற்கான சட்ட அடிப் படைகள் இருப்பின், சட் டப்படி கைது செய்து நீதி மன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும்.

3. பள்ளிக் கல்வித்துறை விசா ரணை:

அரசு உதவி பெறும் கே.கே. நாயுடு பள்ளியில் சாதியப் பாகுபாடு நடை பெற்றதா, மாணவர்களின் பாதுகாப்பு உறுதிசெய்யப் பட்டதா, பள்ளி நிர்வாகம் தனது பொறுப்புகளை முறையாக நிறைவேற்றியதா என்பதைப் பள்ளிக் கல்வித் துறை விசாரித்து அறிக்கை வெளியிட வேண்டும்.

4. பள்ளி நிர்வாகத்தின் மீது கடு மையான நடவடிக்கை:

குற்றச்சாட்டுகள் உறுதிப் படுத்தப்பட்டால், பள்ளி யின் அங்கீகாரம் மற்றும் அரசு உதவி தொடர்பாகச் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். பள்ளி நிர் வாகம் மாணவர்களின் பாது காப்பையும் சமத்துவத்தை யும் உறுதிசெய்யத் தவறியது நிரூபிக்கப்பட்டால், உரிய சட்ட நடைமுறைகளைப் பின்பற்றி பள்ளியை அரசே ஏற்று நடத்துவதற்கான நட வடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும்.

5. குடும்பத்திற்குப் பாதுகாப் பும் நீதியும்:

மாணவனின் குடும்ப த்தி னருக்குத் தேவையான சட்ட உதவி, பாதுகாப்பு மற் றும் உரிய நிவாரணத்தை அரசு வழங்க வேண்டும். விசாரணை எந்தவிதமான அழுத்தத்திற்கும் உள்ளாகா மல் நடைபெறுவதை உறு திப்படுத்த வேண்டும்.

6. அனைத்துப் பள்ளிகளிலும் சாதியப் பாகுபாட்டைத் தடுக்க நடவடிக்கை:

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் சாதியப் பாகுபாடு, தீண் டாமை, உணவுப் பழக்கத் தின் அடிப்படையிலான இழிவுபடுத்துதல் மற்றும் மாணவர்களை அச்சுறுத்து தல் போன்றவற்றைத் தடுப் பதற்கான வலுவான கண்கா ணிப்பு நடைமுறைகளை அரசு உருவாக்க வேண்டும்.

கல்வி என்பது மனித னைச் சிந்திக்க வைப்பதற் கும், சமத்துவத்துடன் வாழக் கற்றுக்கொடுப்பதற் குமான கருவியாகும். அத்த கைய கல்விக்கூடத்தில் ஒரு மாணவன் தனது சமூகப் பின்னணியாலும் உணவுப் பழக்கத்தாலும் அவமானப் படுத்தப்பட்டதாகக் குற்றச் சாட்டு எழுவது மிகுந்த கண் டனத்திற்குரியது.

சாதியப் பாகுபாட்டிற்கு எதிராகப் பேசுவது மட்டும் போதாது; அதைத் தடுப்ப தற்கும், பாதிக்கப்பட்டவர்க ளுக்கு நீதி வழங்குவதற்கும், குற்றம் நிரூபிக்கப்படு பவர் கள் மீது சட்டப்படி நடவ டிக்கை எடுப்பதற்கும் அரசு உறுதியுடன் செயல்பட வேண்டும்.

மாணவன் அகிலனின் மர ணத்திற்கு நீதி கிடைக்கும் வரை ஆதித்தமிழர் பேரவை இந்தப் பிரச்சினையைத் தொடர்ந்துமுன்னெடுக்கும். பாதிக்கப்பட்ட குடும்பத்தி ற்கு நீதி கிடைக்கவும், இனி எந்தவொரு மாணவரும் சாதிய அவமானத்திற்கும் அச்சுறுத்தலுக்கும் ஆளா காத சூழலை உருவாக்கவும் தமிழ்நாடு அரசு உடனடி யாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாணவன் அகிலனின் மர ணத்திற்கு நீதி வேண்டும்!

கல்விக்கூடங்களில் சாதி யப் பாகுபாட்டிற்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்!

குற்றஞ்சாட்டப்பட்ட வர்கள் மீது சட்டப்படி கடு மையான நடவடிக்கை எடுக்க வேண்டும்!

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள் ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சிவ. செந்தில்குமார்

அக்டோபர் 26 (2025)



மாணவப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்.

குண்டடம் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், ஒன்றியச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

ஆரத்தொழுவு பஞ்சாயத்து தலைவராகவும், குண்டடம் ஒன்றிய பெருந்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

ஈரோடு மாவட்ட மருந்து வணிகர்கள் சங்க செயலாளர், திருப்பூர் மாவட்ட விளையாட்டு துறை உறுப்பினர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

நீலகிரி மாவட்டத்தில்

கனமழை : பலத்த சேதம்!

பொதுமக்களுக்கு எச்சரிக்கை!

உதகை, அக். 26-

நீலகிரி மாவட்டத்தில் கொட்டித் தீர்த்த கனமழை காரணமாக ஊட்டி, குன் னூர் கோத்தகிரி சுற்று வட் டாரப் பகுதிகளில் பாதிப்பு கள் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக குன்னூர் மே ட் டு ப் பா ளை யம் மலைப்பாதையில் கடுமை யான சேதம் ஏற்பட்டு போக்குவரத்து துண்டிக்கப் பட்டுள்ளது. இந்த நிலை யில், மாவட்ட நிர்வாகம் அவசர அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில், "இந்திய வானிலை ஆய்வு மையம் மிக கனமழை எச்சரிக்கை வி டு க் க ப் ப ட் ட தை த் தொடர்ந்து நீலகிரி மாவட் டத்தில் மிக கனமழை பெய்துவருவதால் சாலைக ளில் மரங்கள் விழுந்தும் மண்சரிவுகள் ஏற்பட்டும் போக்குவரத்திற்கு இடை யூறாக உள்ளதால் நீலகிரி மாவட்ட த்திற்கு வருகைபு ரியும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப் படுகிறார்கள்.

மேலும், மிக கனமழை பெய்யும் என முன்னறிவிப்பு உள்ளதால் அடுத்த மூன்று நாட்களுக்கு வானிலை சீராகும்வரை நீலகிரி மாவட்டத்திற்கு வருகை புரிவதை தவிர்க்குமாறும் கேட்டுக் கொள்ளப்படு கிறது.

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; உளவுத்துறையின் ரகசிய ரிப்போர்ட்டை முதலமைச்சர் படிக்கறதே இல்லைன்னும் அவருடைய வியூக அட்வைசர்களும் 2 முக்கிய அமைச்சர்களும் தான் படிக்கிறதா தலைமைச் செயலக வட்டாரத்தில் பேச்சு அடிபடுதே!

பட்டணம் : **ஆமாமய்யா; நான் கூட கேள்விப்பட்டேன். அது உண்மைன்னா உளவுத்துறையின் ரகசிய ரிப்போர்ட்டுக்கு அர்த்தமே இல்லாம போயிடும். இது பாதுகாப்பு விதிகளுக்கும் எதிரானதாச்சே. முதலமைச்சருக்கு இது தெரியாதா? பூனைக்கு யார் மணி கட்டறது?**

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(23.10.2026)



1. சாத்தான்குளம் அருகே வீடு புகுந்து வாலிபர் பயங்கர வெறிச்செயல், காதலியின் தாயை சரமாரியாக வெட்டிக்கொன்று, இரண்டு சிறுமிகள் கடத்தல், தந்தை மற்றும் தம்பிக்கும் அரிவாள் வெட்டு....

2. சென்னை செங்குன்றம் அருகே எருமை வெட்டி பாளையத்தில் டாஸ்மாக் கடையில் மது போதையில் ஏற்பட்ட தகராறில், லாரி டிரைவர் ஹெல்மெட்டால் அடித்து கொலை, உடலை மைதானத்தில் குழி தோண்டி புதைத்த கொடூரம் ...

3. சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே குன்னக்குடி சாலையில் வாலிபர் ஓட ஓட வெட்டிக்கொலை ...



4. தூத்துக்குடி திரேஸ்புரம் பகுதியில் முன்விரோதம் காரணமாக மீனவர் கத்தியால் குத்தி படுகொலை ....

5. திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அருகே குரிசிலா பட்டு பகுதியில் கள்ளத்தொடர்பு காரணமாக கணவனை கொலை செய்த மனைவி மற்றும் காதலன் சிக்கினர் ...

6. தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் அருகே பன்னம்பாறையில் நிலப்பிரச்சினை சம்பந்தமாக ஏற்பட்ட தகராறில் விவசாயி கல்லால் அடித்துக் கொலை ...



7. குமரி மாவட்டம் குலசேகரத்தில் கல்லூரி மாணவிகளுக்கு லிப்ட் கொடுப்பது போல் அழைத்துச் சென்று, காரில் பாலியல் தொந்தரவு கொடுத்த த.வெ.க. பிரமுகர் சிக்கினான்...

8. திண்டுக்கல் அருகே நந்தவனப் பட்டியில் 13 வயது சிறுமிக்கு ஆசை வார்த்தை கூறி, கடத்திச் சென்று பாலியல் அத்துமீறலில் ஈடுபட்ட கல்லூரி உதவி பேராசிரியர் சிக்கினான்....

9. சென்னை கொளத்தூரில் 15 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த தாயின் கள்ளக்காதலன் சிக்கினான் ...

10. சென்னை ஓட்டேரியில் பத்தாம் வகுப்பு மாணவியிடம் பாலியல் தொல்லையில் ஈடுபட்ட வாலிபர் சிக்கினான் ...

11. நெல்லை மாவட்டம் நாங்குநேரி அருகே வேத பாடசாலையில் தங்கி படித்து வந்த சிறுவர்களுக்கு பாலியல் தொல்லை கொடுத்த ஆசிரியர் சிக்கினான்...



12. சென்னை திருவல்லிக்கேணி எல்லீஸ் சாலையில் ஷேர் செய்து மதுபானம் வாங்குவதில் தகராறு, செல்போன் வியாபாரிக்கு உருட்டு கட்டை அடி ...

13. திருப்பூர் மாநகரில் மளிகை கடைக்காரர் வீட்டு பூட்டை உடைத்து 45 சவரன் நகை மற்றும் 1.5 லட்சம் பணம் கொள்ளை ...

14. சிவகங்கை பேருந்து நிலையம் அருகே விலைவாசி உயர்வால் பாதிக்கப்பட்ட பெண் தனது மகனுடன் சாலையில் உருண்டு கண்ணீருடன் போராட்டம் ...



15. திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே வேப்பன் வலசு கிராமத்தில் விவசாயி வீட்டிற்கு வழக்கமாக ரூ.500 வரும் மின் கட்டணம் , ரூ 49.000/- வந்ததால் அதிர்ச்சி ...

16. தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் கள்ளபிரான் கோயில் அருகே காவலாளி துர்க்கைசாமி என்பவரை அரிவாளால் வெட்டி விட்டு தப்பியோடிய மர்ம நபர்.